# கார்பன் சமன்பாட்டை எட்டும் நோக்கில் சென்னை காலநிலை செயல்திட்ட கையேடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்




**சென்னை:** வரும் 2050-ம் ஆண்டுக்குள் சென்னை மாநகரம் கார்பன் சமன்பாட்டை எட்டும் நோக்கத்துடன் கூடிய சென்னை காலநிலை செயல்திட்ட கையேட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இந்த செயல்திட்டம், வரும் 2050-ம் ஆண்டுக்குள் சென்னை மாநகரம் கார்பன் சமன்பாட்டை எட்டவும், தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு நோக்கமான 2070-ம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை பூஜ்ஜியமாக குறைக்கும் இலக்கை எட்டவும் பயனுள்ளதாக இருக்கும்.

**கடும் வெப்பநிலை:** பருவநிலை மாற்றம் தொடர்பான பன்னாட்டு அரசுகளின்குழு (ஐபிசிசி) கடல் மட்ட உயர்வு, கடுமையான அதிக வெப்பநிலை மற்றும் சென்னை போன்ற கடலோர நகரங்களுக்கு காலநிலை பாதிப்புகளால் ஏற்படும் அபாயங்கள் ஆகியவற்றால் கடுமையான சேதங்கள் வரவிருப்பதை எச்சரிக்கிறது. கடற்கரை நகரமான சென்னை போன்ற நகரத்துக்கான காலநிலை செயல்திட்டமானது, உள்ளூர் அளவில் செயல்படுத்தப்படும் அறிவியல் அடிப்படை கொண்ட நடவடிக்கைகளைபிரதிபலிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

**பசுமை வேலைவாய்ப்பு:** இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாசை குறைத்து, காலநிலை சவால்களை எதிர்கொள்ளவும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவியாக இருக்கும்.

சென்னை காலநிலை செயல் திட்டமானது, மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டத்துடன் ஒன்றி காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களான புயல், வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வு போன்றவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உதவியாக இருக்கும்.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி**: இத்திட்டம் 6 முன்னுரிமை பகுதிகளில் நடவடிக்கை மேற்கொள்ள கவனம் செலுத்துகிறது. குறிப்பாக, 2050-ம் ஆண்டுக்குள் சென்னையில் 100 சதவீதம் வணிகக் கட்டிடங்களில் அதிக திறன்கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் பயன்பாட்டுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிக்கவும், மாநகர போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை 100 சதவீதம் மின்மயமாக்குதல் மற்றும் தனியார் வாகனங்களின் மின்மயமாக்கலை ஊக்குவிக்கும் இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் மெய்யநாதன், மாநகராட்சி மேயர் பிரியா, தலைமைச் செயலர் இறையன்பு, நகராட்சி நிர்வாகத்துறை செயலர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலர் சுப்ரியா சாஹூ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மத்திய அரசின் ‘ரோஜ்கர் மேளா’ விழா: 884 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கல்**




இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில், சென்னையில் நேற்று நடைபெற்ற ‘ரோஜ்கர் மேளா’ வேலைவாய்ப்பு வழங்கும் விழாவில் மத்திய நிதி சேவைகள் துறை இயக்குநர் வி.வி.எஸ்.கரயாத், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல்

இயக்குநர் எஸ்.மதி உடன் பணிநியமன ஆணைகளை பெற்றவர்கள். படம்: ம.பிரபு

**சென்னை:** மத்திய அரசின் 'ரோஜ்கர் மேளா' என்ற நிகழ்வில் 884 பேருக்குபணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. மத்திய அரசு ஆண்டுக்கு 10 லட்சம் வேலைவாய்ப்புகளை இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்று தீர்மானம் இயற்றியுள்ளது. அதன்படி, நாடு முழுவதும் 'ரோஜ்கர் மேளா' என்ற நிகழ்வை நடத்தி வருகிறது. மத்தியநிதி சேவைகள் துறை சார்பில், 6-வது ரோஜ்கர் மேளா நேற்று நாடு முழுவதும் 43 இடங்களில் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் ஒருங்கிணைப்பாளராக உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் ரோஜ்கர் மேளா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில், மத்திய நிதி சேவைகள் துறை இயக்குநர் வி.வி.எஸ்.கரயாத், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் எஸ்.மதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று மத்திய அரசின் பல்வேறு துறைகளில் 884 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

பணிநியமன ஆணைகளைப் பெற்றவர்களிடையே பிரதமர்மோடி காணொலிக் காட்சி மூலம் உரையாற்றினார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 110 பேர், யூனியன் வங்கியில் 39 பேர், அஞ்சல் துறையில் 29 பேர்,ரயில்வேயில் 170 பேர், வருமான வரித் துறையில் 207 பேர், இந்தியன் வங்கியில் 75 பேர், சரக்கு மற்றும் சேவைத் துறையில் 74 பேர் உள்ளிட்ட 884 பேர் பணி நியமன ஆணைகளைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் அஷுதோஷ் சவுத்ரி, சென்னை சுங்கத் துறை முதன்மை ஆணையர் ரவீந்திரநாத், ஜிஎஸ்டி ஆணையர் கே.பாலகிருஷ்ண ராஜு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் மோகன் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## சுய உதவிக்குழுக்களுக்கு மணிமேகலை விருது: மாநகராட்சி அறிவிப்பு




**சென்னை:** சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு மணிமேகலை விருது வழங்கப்படும் என்று அறிவித்தார்.


அதன்படி 2022-23-க்கான மணிமேகலை விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர அளவிலானகூட்டமைப்புகள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பங்கள் வரும் 25-ம் தேதிக்குள் சமுதாய அமைப்பாளர்கள் மூலம் சென்னை நகர இயக்க மேலாண்மை அலகு, எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-32 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கோவின் இணையதளம் முற்றிலும் பாதுகாப்பானது: மத்திய அரசு உறுதி

**புதுடெல்லி:** இந்தியாவில் 2021 ஜனவரியில் கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது. இதற்காக கோவின் இணையதளம் தொடங்கப்பட்டது.

தடுப்பூசிக்கான முன்பதிவு, தடுப்பூசி மையங்கள் உள்ளிட்டதகவல்கள் இதில் இடம்பெற்றிருந்தன. தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் விவரம் இதில் பதிவேற்றம் செய்யப்பட்டது. பிறகு தடுப்பூசி செலுத்திக் கொண்ட சான்றிதழும் இதிலிருந்து வழங்கப்பட்டது.




இந்நிலையில் தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து இந்தியர்களின் தனிப்பட்ட தகவல்களும் இணைய தளத்தில் கிடைப்பதாக புகார் எழுந்தது. இதுகுறித்து விசாரணை நடத்துமாறு அரசுக்கு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "கோவின் இணையதளம் முற்றிலும் பாதுகாப்பானது. தகவல் கசிவு விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு செர்ட்-இன் (இந்திய கணினி அவசரகால எதிர் நடவடிக்கை குழு) கேட்டுக்கொள்ளப்பட்டது. இதில் கோவின் இணைய தளத்திலிருந்து நேரடியாக தகவல் கசியவில்லை என முதற்கட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கோவின் இணைய தளத்தில் தரவுகளின் பாதுகாப்புக்கு போதியபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தகவல் கசிந்துள்ளதாக வெளியான செய்தி குறும்புத்தனமானது" என கூறப்பட்டுள்ளது.

**பிரம்மோஸ் ஏவுகணை 21-ம் நூற்றாண்டின் பிரம்மாஸ்திரம்: வெள்ளி விழாவில் மூத்த விஞ்ஞானி சிவதாணுப் பிள்ளை புகழாரம்**

பிரம்மோஸ் ஏவுகணை 21-ம் நூற்றாண்டின் பிரம்மாஸ்திரம் என்று மூத்த விஞ்ஞானி ஏ.சிவதாணுப் பிள்ளை கூறினார்.

இந்தியா- ரஷ்யாவின் கூட்டு முயற்சியான பிரம்மோஸ் ஏவுகணையின் வெள்ளிவிழா ஆண்டு கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் கோலாகலமாக நிறைவடைந்தன. டெல்லியில் நடைபெற்ற நிறைவு விழாவில் மூத்த விஞ்ஞானி ஏ.சிவதாணுப் பிள்ளை பங்கேற்று பேசியதாவது:



சிவதாணுப் பிள்ளை

பிரம்மோஸ் திட்டத்தின் மூலம் சூப்பர் சானிக் ஏவுகணையை கொண்டுள்ள முதலாவது நாடு இந்தியா என்பது உலகிற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஐந்தாவது நாடு என்ற கருத்து உடைக்கப்பட்டுள்ளதாக ராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தில் இந்தியா-ரஷ்யா இடையேமுக்கியப் பங்களிப்பு செய்தவரும், பிரம்மோஸ் திட்டத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்தவரும், இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்று அழைக்கப்பட்டவருமான முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஒருமுறை கூறினார்.

ஏற்கெனவே, பிரம்மோஸ் பல மைல் கற்களை எட்டியிருந்தது. இந்த நிலையில், 1998-ம் ஆண்டு பிப்ரவரி 12-ல் கூட்டுமுயற்சித் திட்டம் தொடங்கப்பட்டு, 2001, ஜூன் 12-ல் முதலாவது பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணை வெற்றிகரமாக செலுத்தப்பட்டது வரை இந்தத் திட்டம் முற்றிலும் தனித்தன்மையானது. எந்தவொரு சவாலையும் நாம் ஏற்றுக்கொண்டோம். எந்தவொரு சவாலையும் முடியாது என்று ஒருபோதும் நாம் கூறியதில்லை. பிரம்மோஸ் ஏவுகணை 21-ம் நூற்றாண்டின் பிரம்மாஸ்திரம். ஜனநாயகத்தில் பலம்வாய்ந்த நாடு மட்டுமே சமாதானத்தை முன்னெடுக்க முடியும். பிரம்மோஸ் போன்ற சக்திவாய்ந்த ஆயுதம் தான் உலகில் சமாதானத்தை முன்னெடுக்க இந்தியாவுக்கு பலத்தை அளித்தது.

இவ்வாறு சிவதாணுப் பிள்ளை பேசினார்.

நிகழ்ச்சியில் பிரம்மோஸ் திட்டத்தின் தலைவர் அதுல் டி ரானே பேசுகையில், "கூட்டு முயற்சி திட்டத்தை முன்னின்று தலைமை தாங்கும் தொலைநோக்குப் பார்வையை சிவதாணுப் பிள்ளைகொண்டிருந்தார். நாம் கொண்டிருந்த

சிறந்த தலைவர்களில் இவரும் ஒருவர். பிரம்மோஸ் இன்று தூணாக நிற்கிறது என்றால் சிவதாணுப் பிள்ளை தான் அந்த தூணாக இருக்கிறார்" என்று பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியின்போது பிரம்மோஸ் கலையரங்கை சிவதாணுப் பிள்ளை தொடங்கி வைத்தார். டாக்டர் ஏ.சிவதாணுப் பிள்ளை கலையரங்கு என இதற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கலையரங்கின் நிறுவனர்கள் மாடத்தில் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி என்ற முறையில் அவரது சீரிய பணிக்காலத்தில் அவர் பெற்ற விருதுகளும் பட்டயங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விழாவில் பிரம்மோஸ் திட்ட துணைத் தலைமை நிர்வாக அதிகாரி சஞ்சீவ் கே.ஜோஷி, சந்தை ஊக்குவிப்பு மற்றும் ஏற்றுமதி பிரிவுஇயக்குநர் பிரவீன் பதக் மற்றும் பிரம்மோஸ் திட்ட விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

ஹைதராபாத், நாக்பூர், பிலானி ஆகிய இடங்களில் உள்ள பிரம்மோஸ் பணி மையங்களிலும் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இந்த விழாக்களில் அதுல் டி.ரானே காணொலி வாயிலாக ஊழியர்களிடையே உரையாற்றினார்

**அணு ஆயுதங்களை வேகமாக விரிவுபடுத்துகிறது சீனா: எஸ்ஐபிஆர்ஐ அறிக்கையில் தகவல்**



**புதுடெல்லி:** சீனா தனது அணு ஆயுதங்களை தொடர்ந்து வேகமாக விரிவுபடுத்தி வருகிறது என ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி மையம் (எஸ்ஐபிஆர்ஐ) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்ஐபிஆர்ஐ நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சீனாவிடம் கடந்த 2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் 350 அணு ஆயுதங்கள் இருந்தன. தற்போது சீனாவிடம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 410 ஆக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானிடம் 170 அணு ஆயுதங்கள் உள்ளன. இந்தியாவிடம் 164 அணு ஆயுதங்கள் உள்ளன. 2030-ம் ஆண்டுக்குள் அமெரிக்கா அல்லது ரஷ்யாவிடம் இருக்கும் அளவுக்கு சீனாவிடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் இருக்கும். இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை தொடர்ந்து புதிய ரக ஏவுகணைகளை அறிமுகம் செய்வதன் மூலம் இரு நாடுகளும் அணு ஆயுதங்களை விரிவுபடுத்துவதுபோல் தெரிகிறது. பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை தடுத்து அழிப்பதில் இந்தியா முக்கிய கவனம் செலுத்தினாலும், சீனாவுக்கு அப்பால் உள்ள இலக்குகளை சென்று தாக்கும் ஏவுகணைகளை உருவாக்குவதில் இந்தியா அதிக கவனம் செலுத்துவதுபோல் தெரிகிறது.

மொத்தம் உள்ள 9 அணு ஆயுதநாடுகள் தங்கள் அணு ஆயுதங்களை நவீனப்படுத்தி வருகின்றன. உலகளவில் மொத்தம் 12,512 அணு ஆயுதங்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 90% அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளது. ரஷ்யாவிடம் 5,889, அமெரிக்காவிடம் 5,244, பிரான்ஸிடம் 290, இங்கிலாந்திடம் 225, இஸ்ரேலிடம் 90, வடகொரியாவிடம் 30 அணு ஆயுதங்கள் உள்ளன.

சீனாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதங்களை விரிவுபடுத்துவதால், இந்தியாவும் வலுவான சக்தியுடன் இருக்க வேண்டிய நிலை உள்ளது. அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்த மாட்டோம் என்ற கொள்கையை இந்தியா அறிவித்தாலும், பதில் தாக்குதல் நடவடிக்கைக்கு இந்தியா வலுவுடன் இருக்க வேண்டியுள்ளது. அதனால் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் ஏவுகணைகளை குறிப்பாக அக்னி ரக ஏவுகணைகளை வலுப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் 1,000 முதல் 2,000 கி.மீ வரை சென்று தாக்கும் புதிய தலைமுறை அக்னி பிரைம் ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. 5,000 கி.மீ தூரம் வரை சென்றுதாக்கும் அக்னி-5 ஏவுகணைகளை படையில் சேர்க்கும் நடவடிக்கையையும் இந்தியா மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் தனது அணு ஆயுதங்களை மெதுவாக விரிவுபடுத்துகிறது என்றாலும், சீனா தனது அணு ஆயுதங்களை தொடர்ந்து வேகமாக விரிவுபடுத்தி வருகிறது. ஆனால், இந்தியா புதிய தலைமுறை அக்னி ஏவுகணைகள் மற்றும்அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ரபேல் போர் விமானங்களை படையில் சேர்த்ததன் மூலம் தாக்குதலை தடுக்கும் திறனில் நம்பிக்கையுடன் உள்ளது.

இந்தியாவிடம் தற்போது ஐஎன்எஸ் அரிஹன்ட் என்ற ஒரே ஒரு அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் மட்டுமே செயல்பாட்டில் உள்ளது. இதிலிருந்து 750 கி.மீ தூரம் சென்று தாக்கும் கே-15 ரக அணு ஏவுகணை மட்டுமே வீச முடியும். ஆனால், அமெரிக்கா, ரஷ்யா, சீனாவிடம் அதிக எண்ணிக்கை அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளன. இவற்றில் இருந்து 5,000 கி.மீ சென்று தாக்கும் ஏவுகணைகளை ஏவ முடியும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் `அக்னி ப்ரைம்' ஏவுகணை சோதனை வெற்றி - விஞ்ஞானிகளுக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு**



ஒடிசா கடற் பகுதியில் உள்ள ஏபிஜே.அப்துல் கலாம் தீவில் இருந்து நேற்று முன்தினம் இரவு சீறிப் பாய்ந்துச் சென்ற `அக்னி ப்ரைம்' ஏவுகணை.படம்: பிடிஐ

**பாலசோர்**: அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும், அதிநவீன 'அக்னி ப்ரைம்' ஏவுகணை நேற்று முன்தினம் இரவு வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு `அக்னி' ரக ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு, ராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இதுவரை 1-5 என படிப்படியாகத் திறன் மேம்படுத்தப்பட்ட அக்னி ஏவுகணைகள் ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக அக்னி-6 ஏவுகணையை உருவாக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில், அக்னி ரக ஏவுகணைகளில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுடன், கூடுதல் அம்சங்களை சேர்த்தும், அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் வகையிலும் ‘அக்னி ப்ரைம்’ என்ற புதிய தலைமுறை ஏவுகணை தயாரிக்கப்பட்டது.

இந்த ஏவுகணையை கடந்த 2021 ஜூன் மாதம் டிஆர்டிஓ முதல்முறையாகப் பரிசோதித்தது. இது வெற்றிகரமாக அமைந்ததால், 2021 டிசம்பரில் 2-வது முறையாகவும், 2022 அக்டோபரில் 3-வது முறையாகவும் இந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆயுதப் படையில் சேர்க்கப்படுவதற்கு முந்தைய, இரவு நேரப் பரிசோதனை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

ஒடிசா கடற் பகுதியில் உள்ள, ஏபிஜே.அப்துல் கலாம் தீவில் டிஆர்டிஓ இந்தப் பரிசோதனையை மேற்கொண்டது. இதில், `அக்னி ப்ரைம்' ஏவுகணை திட்டமிட்டபடி இலக்கை துல்லியமாகத் தாக்கி அழித்தது.

இந்த ஏவுகணை 1,000 கி.மீ. முதல் 2,000 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கையும் துல்லியமாகத் தாக்கி அழிக்கும். மேலும், அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறனும் உடையது. அதேபோல, `அக்னி ப்ரைம்' ஏவுகணைகளை ரயில், சாலை உள்ளிட்ட எந்த இடத்திலிருந்தும் ஏவ முடியும். நாட்டின் எந்தப் பகுதிக்கும் உடனடியாக கொண்டுசெல்ல முடியும். அக்னி-3 ஏவுகணையின் எடையைவிட, `அக்னி ப்ரைம்' ஏவுகணையின் எடை 50 சதவீதம் குறைவாகும். அதிநவீன ரேடார்கள் மூலம் இந்த ஏவுகணை செல்லும் பாதையைக் கண்காணிப்பதுடன், அதை வழிநடத்தவும் முடியும்.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட சோதனையில், ஏவுகணையின் அனைத்து அம்சங்களும் வெற்றிகரமாகச் செயல்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து டிஆர்டிஓ விஞ்ஞானிகள் கூறும்போது, “அக்னி ப்ரைம் ஏவுகணை ஏற்கெனவே 3 முறை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், முதல்முறையாக இரவு நேரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நவீன சாதனங்கள் மூலம் ஏவுகணை செலுத்துப்பட்ட பாதை முழுவதும் கண்காணிக்கப்பட்டன” என்றனர்.

அக்னி ப்ரைம் ஏவுகணையை ஆயுதப் படையில் சேர்ப்பதற்கு வழிவகுத்துள்ள இந்தப் பரிசோதனையை டிஆர்டிஓ மூத்த அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் கமாண்டர்கள் பார்வையிட்டனர். "இந்த வெற்றி, ராணுவத்தின் பலத்தை மேலும் அதிகரிக்கும்" என்று அவர்கள் தெரிவித்தனர். ஏவுகணை

பரிசோதனை வெற்றிகரமாக முடிந்ததற்காக டிஆர்டிஓ விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு பாது காப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

**உலகின் முதல் சோடியம் பேட்டரி: சாதனை முயற்சியில் மதுரை லாரி ஓட்டுநரின் மகள்**



மதுரை ஆரப்பாளையத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநரான ராஜேந்திரன் மகள்தான் சுபத்ரா. தனது படிப்பு மூலம் இஸ்ரோவில் 2005-2006-ம் ஆண்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு செயல்முறை வடிவமைப்பின் பொறியியல் பிரிவில் சுபத்ரா விஞ்ஞானியாகப் பணியாற்றினார். அதன்பிறகு அவர், துபாய், நெதர்லாந்து, இத்தாலி மற்றும் ஆசியா, ஆப்ரிக்காவின் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரிந்துள்ளார். புதிய கண்டுபிடிப்பால் சாதிக்க வேண்டும் என இலக்குடன் அப்பணியில் இருந்து விலகினார்.

தற்போது பெட்ரோல், டீசல் வாகனங்களில் இருந்து மக்கள், படிப்படியாக எலெக்ட்ரிக் வாகனங்களுக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள். எலெக்ட்ரிக் வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் பாட்டரிக்கு மாற்றாக, சோடியம் பாட்டரி பயன்படுவத்துவதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

இவரது ஆராய்ச்சி வெற்றிபெற்றால், குறைந்தவிலைக்கு எலெக்ட்ரிக் வாகனங்கள் கிடைக்கும். தற்போது சென்னையில் சொந்தமாக ஆட்ரல் ஈஎஸ்பி என்ற நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். இதன் மூலம் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவும் முயற்சி மேற்கொண்டுள்ளார்.